# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 66/2022 | Date : 17.04.2026 | PW |
|---|---|---|
| Name: லோகநாதன் | த/பெ. மாரிகவுண்டர் | |

**4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோனவர் என் தாயார் என்றால் சரிதான். அவருக்கு வயது 70 இருக்கும் என்றால் சரிதான். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். 1ம் மனுதாரர் சந்திரசேகரன் எனது சகோதரர் என்றால் சரிதான். அவர் லாரி ஓட்டுநராக பணிபுரிகிறார். அவருக்கு மாதம் எவ்வளவு சம்பாதிக்கிறார் என்றால் அவர் ஓட்டுவது பொறுத்து மாதம் ரூ.10,000/– சம்பாதிப்பார். நானும் எனது சகோதரரும் ஓட்டுநராக பணிபுரிந்து என் தாயாரை நாங்கள்தான் பராமரித்தோம் என்றால் சரியல்ல. என் தாயார் விவசாயம் மற்றும் மிளகாய் வியாபாரம் செய்து அவரும் சம்பாதித்து வந்தார். என் தாயார் எங்களுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். எங்களுடன் இருந்து விவசாயம் பார்த்து வந்தார். விபத்தை நானோ எனது சகோதரரோ நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் என் தாயார் மீது முதலில் ஆட்டோ ஓட்டுநர் தான் தான் வேகமாக ஆட்டோவை ஓட்டி வந்து மோதினார் என்றால் சரிதான். ஆட்டோ மோதியதால்தான் என் தாயார் ரோட்டில் விழுந்துவிட்டார். ஆட்டோ என் தாயார் மீது மோதாமல் இருந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். அதனால் இந்த விபத்திற்கு முழுக்காரணம் ஆட்டோ ஓட்டியவர் என்றால் சரியல்ல. இரு வாகனமும் தான் காரணம். விபத்து சமயத்தில் ஆட்டோ ஓட்டுனருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். ஆட்டோஓட்டுநர்தான் அதிவேகமாகவும் அஜாக்ரதையாகவும் வந்து விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு பஸ் ஓட்டிவந்த 3ம் எதிர்மனுதாரர் காரணமில்லை என்றால் சரியல்ல. பேருந்து ஓட்டுநர் அதிவேகமாக வந்ததால்தான் விபத்து ஏற்பட்டது. 3ம் எதிர்மனுதாரர் மீது எந்த தவறும் இல்லை என்றாலும் 4ம் எதிர்மனுதாரர் பகரப்பொறுப்பாளி ஆகமாட்டார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/–லோகநாதன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.